பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

25 09 2025 THURSDAY 6.30 PM

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உற்பத்திக்கான இந்தியா இயக்கம் உலக அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தேர்தலின்போது பதிவாகும் தபால் வாக்குகளை எண்ணும் பணியினை விரைவுபடுத்துவதற்கான நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

3. புத்தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிஜேபி பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

5. உலகக்கோப்பை ஜுனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் –

<<<<<>>>>

உற்பத்திக்கான இந்தியா இயக்கம் உலக அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்த இயக்கம் 11 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளதையடுத்து சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் அவர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

நாடு முழுவதும் தொழில் முனைவோர்களுக்கு இந்த இயக்கம் உத்வேகம் அளித்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உலக அளவில் வர்த்தக வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதில் இந்த இயக்கம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், உலக அளவில் உற்பத்திக்கான முனையமாக இந்தியா உருவெடுப்பதில் இந்த இயக்கம் முக்கிய பங்கு வகித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் மாற்றத்தை உற்பத்திக்கான இந்தியா இயக்கம் கொண்டுவந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைநோக்கு பார்வையுடன் கொண்டுவந்த இந்த இயக்கம் இறக்குமதியை குறைப்பதற்கு பெரிதும் உதவியதாக குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு துறைகளில் தற்போது இந்தியா முன்னணியில் திகழ்வதற்கும் உற்பத்திக்கான இந்தியா இயக்கம் உத்வேகம் அளித்ததாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்டுள்ளது விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக தாம் எழுதிய கட்டுரை ஒன்றையும் பகிர்ந்துள்ளார்.

இந்த வரிக்குறைப்பினால் விவசாயிகளுக்கு ஏற்படும் சேமிப்பு குறித்து அமைச்சர் அதில் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

<<<<<>>>>

புத்தொழில் நிறுவனங்களுக்கு தமிழக அரசு ஊக்கமளித்து வருவதாக மாநில சிறு-குறு தொழில்துறை அமைச்சர் திரு தா மோ அன்பரசன் கூறியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த நான்காண்டுகளில் 212 புத்தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதற்காக 79 கோடி ரூபாய் அளவிற்கு தமிழக அரசு முதலீடு செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தேர்தலின்போது பதிவாகும் தபால் வாக்குகளை எண்ணும் பணியினை விரைவுப்படுத்துவதற்கான நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தபால் வாக்குகள் முழுமையாக எண்ணப்பட்ட பின்னரே மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான இறுதிச்சுற்றுக்கு முந்தைய சுற்று வாக்குகள் எண்ணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால் வாக்குககளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில் கூடுதல் அலுவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிஜேபி பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, அக்கட்சியின் தேசிய துணைத்தலைவர் திரு *Baijayant Panda* பொறுப்பாளராகவும், மத்திய இணையமைச்சர் திரு *Murlidhar Mohol* இணைப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<>>>>>

காங்கிரஸ் கட்சி நிர்வாகி திமுக-வில் சேர்க்கப்பட்டதாக முன்னாள் அமைச்சர் திரு செந்தில் பாலாஜி சமூக வலைதளத்தில் பதிவிட்டது வருத்தத்திற்குரியது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

ராணிப்பேட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு.க.ஸ்டாலினிடம் புகார் தெரிவிக்கப்பட்டதாக கூறினார்.

இதனையடுத்து திரு செந்தில் பாலாஜி அந்த சமூக வலைதள பதிவை நீக்கியுள்ளதாகவும் திரு செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

<<<<<>>>>>

வங்கக்கடலில் அடுத்த 12 மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(Sound Byte – செந்தாமரை கண்ணன் - 44 Sec.)

<<<<<>>>>>

நவராத்திரியையொட்டி, ஈரோட்டினை சேர்ந்த தம்பதியினர் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கொலு பொம்மைகளை வைத்துள்ளதை அப்பகுதி மக்கள் ஆர்வத்துடன் பார்த்து செல்கின்றனர்.

குடவோலை முறை, தினை வகைகள், காங்கேயம் மாட்டுச்சந்தை, திருவிழாக்கள் போன்றவற்றை சித்திரிக்கும் வகையில் பொம்மைகள் வைக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – மூர்த்தி - 47 Sec. )

<<<<<>>>>>

மாவட்டச் செய்திகள்

திருச்சியில் உள்ள கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தில் தீபாவளி விற்பனையை மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஸ் பொய்யாமொழி இன்று தொடங்கிவைத்தார்.

----------------

மத்திய மக்கள் தொடர்பகத்தின் சென்னை மண்டல அலுவலகம் சார்பில், அரசு திட்டங்கள் மற்றும் தேசிய ஊட்டச்சத்து மாதம் குறித்த இரண்டுநாள் விழிப்புணர்வு முகாம் மதுரையில் இன்று தொடங்கியது.

-----------------

கோவையில் சாலை பாதுகாப்பு குறித்த மனித சங்கிலி நிகழ்ச்சியை ஆட்சியர் திரு பவன்குமார் இன்று தொடங்கிவைத்தார்.

------------

பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாளை நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி மிருணாளினி கூறியுள்ளார்.

------------

தருமபுரி மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் 9 முதல் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் இணையதளத்தை பாதுகாப்பாக பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வு பயிற்சியை ஆட்சியர் திரு சத்தீஷ் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

*நாமக்கல் அரசு கலைக்கல்லூரியில் சுற்றுலாவும் – சுற்றுச்சூழல் பாதுகாப்பும் என்ற தலைப்பிலான விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.*

-------------------

*திருவண்ணாமலையில் இந்தியன் வங்கி சார்பில் தூய்மையே சேவை இயக்கம் குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.*

----------------

*நெல்லை மண்டலத்தில் கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தின்மூலம் தீபாவளி பண்டிகையையொட்டி, 12 கோடி ரூபாய் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

----------------

*சென்னையில் ஆன்லைன் வர்த்தகம் மூலம், 70 வயது பெண்மணியிடம் இரண்டு கோடி ரூபாய் மோசடி செய்தது தொடர்பான வழக்கில் இருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.*

<<<<<>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

*உலகக்கோப்பை ஜுனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 50 மீட்டர் பிரிவில் Anushka Thokur தங்கப்பதக்கத்தையும், Anshika வெள்ளிப்பதக்கத்தையும், Aadhya Agarwal வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.*

*ஆடவர் 50 மீட்டர் பிரிவில் Deependra Singh Shekhawat -வெள்ளிப்பதக்கத்தையும், Rohit Kanyan வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.*

-----------

*உலக பாரா தடகள சாம்பியன் போட்டியின் தொடக்கவிழா வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் புதுதில்லியில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.*

*104 நாடுகளை சேர்ந்த 2 ஆயிரத்து 200-க்கும் மேற்பட்டோர் இப்போட்டியில் பங்கேற்கின்றனர்.*

*இந்தியாவின் சார்பில் 73 பேர் இதில் கலந்துகொள்கின்றனர்.*

--------------

*தென்கொரியாவின் Gwangju-வில் நடைபெற்றுவரும் உலக பாரா வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ராகேஷ் குமார், டோமன் குமார் மற்றும் சீத்தல் தேவி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.*

--------------

*வெஸ்ட் இன்டீஸ் அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*சுப்மன் கில் தலைமையிலான இந்த அணியில் 15 பேர் இடம்பெற்றுள்ளனர்.*

*துணை கேப்டனாக ரவீந்திர ஜடேஜா நியமிக்கப்பட்டுள்ளார்.*

*இரு அணிகளுக்கும் இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 2-ஆம் தேதி அகமதாபாதிலும், இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி 10-ஆம் தேதி புதுதில்லியிலும் தொடங்குகிறது.*

-------------

*இலங்கையில் நடைபெற்றுவரும் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.*

-------------------

*சீன Smash டேபிள் டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Diya Chitale வெற்றிபெற்றார்.*

---------------

*Kaohsiung மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் - ஹரிஹரன் Amsakarunan இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

<<<<<>>>>>